# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C. No. 133/2022
Prosecution side witness for P.W.16

| | | | |
|---|---|---|---|
| Name | ... திருமதி.கலா | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **09.06.2026**

**<u>முதல் விசாரணை:-</u>**

நான் கடந்த 25 வருடங்களாக தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி வீரவாஞ்சி நகர் 9ம் தெருவில் குடியிருந்து வருகிறேன். தீப்பெட்டி ஆபிஸில் வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கில் கொலை செய்யப்பட்ட நபரான மணியை தெரியும். அவர் என் வீட்டின் அருகே மாட்டுத்தொழுவம் வைத்திருந்தார். ஆஜர் எதிரியை தெரியாது. எதிரிகள் சூரிய தினேஷ், சுபாஷ் ஆகியவர்களை தெரியாது. மணி கொலைவழக்கு சம்மந்தமாக எனக்கு என்ன தெரியும் என்றால் நான் அன்றைய தினம் காலையிலேயே வேலைக்கு சென்று விட்டேன். மாலை 6 மணிக்கு வீட்டிற்கு வரும் போது மணி அண்ணனை வெட்டிவிட்டதாக சொன்னார்கள். யார் என்றால் தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக நான் வேறு எதுவும் கேள்விபடவில்லை. போலிசார் இந்த வழக்கு சம்பந்தமாக என்னை விசாரிக்கவும் இல்லை. மாலையிலும் விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதி கோரி இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறது.

<u>குறுக்கு விசாரணை அரசு தரப்பில்</u>

போலிசார் என்னை விசாரித்தார் என்றும் அவ்வாறு விசாரணையில் கடந்த 25.03.2022ம் தேதி மதியம் 3.15 மணி அளவில் நான் எங்கள் தெருவில் உள்ள கிருபா மளிகைக்கடைக்கு சென்று சாமான்கள் வாங்கிவிட்டு திரும்ப வீட்டிற்கு வந்துகொண்டிருந்தபோது சிவப்பு கலர் பைக்கில் வந்த நபர் மணி மாட்டுத்தொழுவம் எங்கே இருக்கிறது என்று கேட்டார் என்றும் நான் மணியின் மாட்டுத்தொழுவத்தை காட்டி இதுதான் என்று சொன்னேன் என்றும் அதற்கு அவர்கள் மணி எப்பொழுது வருவார் என்று கேட்டார்கள் என்றும் நான் 3.30 மணிபோல் வருவரர் என கூறி நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றும் அதன் பிறகு நான் வீட்டில் இருந்தபோது அன்றைய தினம் சுமார் 3.30 மணியளவில் மணியின் மாட்டுத்தொழுவில் இருந்து அலறல் சத்தம் கேட்டு நான் வெளியில் வந்து பார்த்த போது மணியின் மாட்டுத்தொழுவத்தில் வெட்டுப்பட்டு கிடந்தார் என்றும் உடனே கூட்டம் கூடியது என்றும் அதனால் போலிசார் வந்து மணியின் உடலை தனியார் அம்புலன்ஸ் மூலம் ஏற்றி கொண்டு சென்றார் என்றும் அதற்கு முன்னர் மேற்கு காவல் நிலைய போலிசார் வந்து தங்களின் செல்போனில் இருந்த வீடியோ பதிவில் பைக்கில் 2 நபர்கள் சென்றது போல் உள்ள வீடியோவை காண்பித்து என்னை விசாரித்தபோது அந்த பைக்கையும் அந்த பைக்கை ஓட்டி சென்றவர் போட்டிருந்த ெஹல்மெட் அவர் அணிந்திருந்த கைலி சட்டை மற்றும் பின்னால் உட்கார்திருந்த ஆடைகள் ஆகியவற்றை பார்த்து என்னிடம் வந்து மணியின் மாட்டுத்தொழுவத்தை பார்த்து விசாரித்த நபர்கள் இவர்கள் தான்

என்று போலிசாரிடம் அடையாளம் காண்பித்தேன் என்றும் போலிஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** – இல்லை.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE,
THOOTHUKUDI.

Case No. S.C. No. 133/2022
Prosecution side witness for P.W.17

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. ரமேஷ் | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **09.06.2026**

A3 present. Others are absent , U/s. 317 Cr.P.C. petition filed and allowed.

**முதல் விசாரணை:-**

நான் கடந்த 15 வருடங்களாக துாத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி, காந்திநகர் அத்தைகொண்டான் ரோட்டில் குடியிருந்து வருகிறேன். ஆட்டோ வைத்து தொழில் செய்து வருகிறேன். சாட்சி ரஞ்சித்பாண்டியை எனக்கு தெரியாது, ஆஜர் எதிரியை தெரியாது. குறிப்பாக எதிரி உய்க்காட்டான் என்பவரை தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு ஒன்றும் தெரியாது, எங்கள் முன்பாக எதிரிகள் யாரையும் கைது செய்யவில்லை. எங்கள் முன்னிலையில் எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை. இவ்வழக்கில் கொலையுண்டு இறந்துபோன மணியை தெரியாது. வேறு ஒன்றும் தெரியாது. எதிரி உய்க்காட்டான் கொடுத்ததாக கூறியுள்ள ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அதன் அடிப்பமையில் சான்று பொருட்கள் கைப்பற்றிய போது தயார் செய்த அத்தாட்சியில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையதுதான். இந்த கையெழுத்தை போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் போட்டுக்கொடுத்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் காணப்படும் கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ- 20** ஆகும். அத்தாட்சியில் காணப்படும் 1வது கையெழுத்து மட்டும் **அ.சா.அ.21** ஆகும். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(இந்நிலையில் சாட்சி வாக்குமூலத்திற்கு மாறுபாடாக சாட்சியமளித்ததால், அரசு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி சாட்சி பிறழ் சாட்சியாக கருதபட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன்பேரில் அனுமதிக்கப்பட்டது.)**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

போலீசார் விசாரித்தார்கள் என்றும், போலீசார் விசாரணையின்போது, கடந்த 02.04.2022 ஆம் தேதி மாலை 04.00 மணிக்கு கோவில்பட்டி மேற்கு காவல்நிலைய ஆய்வாளர் என்னை அழைத்ததன்பேரில் நானும், ஏழாயிரம் பண்ணையை சேர்ந்த குமார் மகன் ரஞ்சித்பாண்டி என்பவரும் கோவில்பட்டி காவல் நிலையம் சென்று ஆய்வாளர் முன்பு ஆஜரானோம் என்றும், அங்கு அவர் எங்களை சாட்சியாக இருக்க அழைத்ததன்பேரில் நாங்கள் சம்மதித்தோம் என்றும், எங்கள் இருவர் முன்பும் எதிரி உய்க்காட்டான் என்பவரை எவ்வித துன்புறுத்தலோ, துாண்டுதலோ, ஆசைவார்தையோயின்றி விசாரிக்க எதிரி உய்க்காட்டான் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அந்த ஒப்புதல்வாக்குமூலத்தில்தான் நானும், ரஞ்சித்பாண்டியும் கையெழுத்து செய்து கொடுத்தோம் என்றும் பின்பு உய்க்காட்டானை கங்கைகொண்டான் கூட்டிசென்று உய்க்காட்டான் அவர் வீட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்த 2 ATM கார்ட் 2 பாஸ் புக் அகியவற்றை அன்றைய தினம் மாலை 06.30 மணிக்கு எங்கள் இருவர் முன்பு ஆய்வாளர் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார் என்றும் அந்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் நாங்கள் கையெழுத்து செய்து கொடுத்தோம் என்றும் அதுதான் அ.சா.ஆ.20, 21 என்றும், போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என சொல்லப்பட்டது.</u>